DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.171/2022**

**prosecution witness: Pw 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1, A2 present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.CC.No. /20

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஆரோக்கிய ஜெயராஜ் | ஜாதி | : |
| த/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**28.02.2023**

முதல் விசாரணை:

1. நான் செம்மடத்தில் வசித்து வருகிறேன். ஆடிட்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 13.08.2021-ம் தேதி காலை 11.00 மணிக்கு நாங்கள் எங்களை வீட்டை பூட்டி விட்டு ஜேம்ஸ் மஹாலில் உள்ள காதணி விழாவிற்கு சென்றுவிட்டோம். பின்னர் பகல் 02.00 மணியளவில் நாங்கள் வீட்டிற்கு சென்ற போது முன்பக்க கதவை திறக்க முடியாததால் பின் பக்கமாக சென்ற போது கதவு திறந்திருந்தது.

2. நான் வீட்டிற்குள் சென்று பார்த்த போது பீரோவில் இருந்த சேலை , துணிகள் எல்லாம் கலைந்துகிடந்தது. நாங்கள் அவற்றை பார்த்த போது எங்கள் வீட்டில் இருந்த Dell நிறுவன லேப்டாப்பை காணவில்லை. பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை நான் சொல்ல சொல்ல தெரிந்த நபர் ஒருவர் எழுதி கொடுத்தார். அதில் உள்ள கையொப்பம் என்னடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ-1 ஆகும். பின்னர் காவல் நிலையத்தில் இருந்து என்னுடைய லேப்டாப் கிடைத்துவிட்டதாக கூறி போலீசார் என்னிடம் கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. காதணி விழாவிற்கு சென்றுவிட்டு முதலில் யார் வீட்டிற்குள் சென்றது என்றால் நான், எனது மனைவி மற்றும் மகளும் சென்றோம்.ஜேம்ஸ் மஹால் என்பது செம்மமடத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். புகாரில் எனது மனைவியும், மகளும் சென்று வீட்டை திறந்து பார்த்துவிட்டு பின்பு எனக்கு போன் செய்த பின்பு நான் வீட்டிற்கு சென்றேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு போன் வந்தவுடன் 10 நிமிடத்தில் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அப்போது சரியாக மணி 01.30 இருக்கும்.

2. காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது நேரம் மாலை 05.00 மணி இருக்கும். என் வீடு இரண்டு மாடி கட்டிடம், கான்கிரேட் வீடு என்றால் சரிதான். போலீசார் என்னை அன்றைய தினம் தவிர மற்ற நாட்கள் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.